<u>9 வது பெருநகர குற்றவியல் நீதிமன்றம்,</u>
<u>எழும்பூர் @ அல்லிக்குளம், சென்னை – 3.</u>

தேதி 04.11.2025

| | | |
|---|---|---|
| சுருக்கு வழக்கு எண் | – | 4177/2024 |
| வாதி/எதிரி/நீதிமன்ற தரப்பு | – | பு.த.சா. 1 |
| பெயர் | – | சுகன்யா |
| தந்தை பெயர் | – | ரமேஷ் |
| வயது | – | 23 |

1873–ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டம் 10–வது வகையங்கள்படி இன்று 04.11.2025 நான் திருமதி. லஷ்மி இளநிலை உதவியாளர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதிமொழி கூறப்பட்டு சாட்சியம் அளிக்கப்படுகிறது. சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

<u>முதல் விசாரணை (எதிரி ஆஜர் இருதரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)</u>

நான் இந்த வழக்கில் புகார்தார் ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிராமண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அந்த வாக்குமூலத்தை படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தேன். என்னுடைய பிரமாணவாக்குமூலத்தில் நான் குறிப்பிட்டுள்ள 1 முதல் 8 வரையிலான ஆவணங்களை **புதசாஆ–1 முதல் 8** ஆ,வணங்களாக குறியீடு செய்யப்படுகிறது. புதசாஆ– 5, 6, 9 நகல் ஆவணமாகும். புதசாஆ–5 அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்பட்டது. புதசாஆ–6, 9 நகல் ஆவணங்கள் என்பதால் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்பட்டது. புதசாஆ–7

ஆவணத்தில் புகார்தாரரின் சீல் இல்லை என எதிரி தரப்பில் ஆட்சேபித்து ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்பட்டது.

எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் என்னால் பதிவு செய்யப்பட்டு எதிரி முன்னிலையில் சாட்சிக்கு படித்து காட்டி சரி என்று அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது,

Sd/- Tmt. P. Magalakshmi, M.L.,

XIX Metropolitan Magistrate,
Egmore @ Allikulam, Chennai-03.